வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: நாராயணசாமி

தேதி: 23.09.2025 நேரம்: மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

- ஆயுஷ்மான் பாரத் திட்டத்தினால், இந்தியாவில் பொது சுகாதார புரட்சி ஏற்பட்டு வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- பிரதமர் திரு. நரேந்திர மோடி, வரும் வியாழக் கிழமை புதுடெல்லியில், உலக உணவு இந்தியா-2025 மாநாட்டை தொடக்கி வைக்கிறார்.
- அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களின் கீழ், குறிப்பாக வீட்டு உபயோகத்திற்கான அன்றாட பொருட்கள் மீது, வரி குறைக்கப் பட்டுள்ளது.
- ஆரோக்கியமான பெண்கள்-வலுவான குடும்பம் இயக்கத்தின் கீழ், புதுச்சேரி ஜிப்மர், இன்று விழுப்புரம் மாவட்டம் ஆயந்தூரில், கிராமப்புறப் பெண்களுக்கான, இலவச மருத்துவ முகாம் ஒன்றை நடத்தியது.

-------------------------

***ஆயுஷ்மான் – மோடி*** (11)

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தினால், இந்தியாவில் பொது சுகாதார புரட்சி ஏற்பட்டு வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் ஏழாண்டு நிறைவை ஒட்டி, இன்று சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில், உயர்தரமான மருத்துவ சேவைகளை, குறைந்த செலவில் மக்களுக்கு வழங்கும் அதே வேளை, எதிர்காலத் தேவைகளையும் கருத்தில் கொண்டு, இத்திட்டம் செயல்பட்டு வருவதாக, பிரதமர் கூறியுள்ளார். நாட்டு மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதில், அரசுக்குள்ள உறுதிபாட்டின் சின்னமாகவே, ஆயுஷ்மான் பாரத் திட்டம் திகழ்வது குறித்து, மத்திய சுகாதார அமைச்சர்

திரு. ஜே.பி நட்டா எழுதியுள்ள கட்டுரை ஒன்றையும், பிரதமர் சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார்.

-------------------------

*மோடி-உணவு மாநாடு* (11)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, வரும் வியாழக் கிழமை புதுடெல்லி பாரத் மண்டபத்தில், உலக உணவு இந்தியா-2025 மாநாட்டை தொடக்கி வைக்கிறார். வரும் 28 ஆம் தேதி வரை நடைபெற உள்ள இம்மாநாடு, உலகின் உணவுக் கூடையாக இந்தியாவை மேம்படுத்துவதற்கான முக்கிய வாய்ப்பாக அமையும் என, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். மாநாடு குறித்து, மத்திய உணவு பதனீட்டுத் துறை அமைச்சர் திரு. சிராக் பாஸ்வான் சமூக ஊடகத்தில் எழுதியுள்ள கட்டுரைக்கான பதிலில் பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார். இவ்விழாவின் ஒருபகுதியாக, வரும் 26, 27 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ள, உலக உணவு ஒழுங்குமுறை அமைப்புகளுக்கு இடையிலான உச்சி மாநாட்டின் சின்னத்தை, மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு. ஜே.பி நட்டா இன்று வெளியிட்டார்.

-------------------------

*சேவா சப்தாஹ்- முத்ரா* 1 (8)

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, மக்கள் சேவை-நல்லாட்சி என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், நாட்டில் மாற்றங்களையும் முன்னேற்றத்தையும் கொண்டு வர, அயராது உழைத்து வருகிறது. வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதன் மூலமாகவும், தொழில் முனைப்பை ஊக்குவிப்பதன் மூலமாகவும், இந்திய இளைஞர்களை நாளைய உலகில் வேலை வழங்குவோராக உயர்த்த, அரசு அமல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து, இன்று, சேவைத் திருவிழா என்னும், இந்த சிறப்பு தொடரில் காண்போம். ..........

சேவா சப்தாஹ்- முத்ரா 2 (15)

நாட்டில் வேலை வாய்ப்புகளை பெருக்க, பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு, கடந்த 11 ஆண்டுகளில், அதிக முன்னுரிமை அளித்து வந்துள்ளது. தொழல் வளர்ச்சி, மற்றும், ஏற்றுமதி பெருக்கத்திலும், ஆள் சேர்ப்புப் பணிகளிலும், அரசு அதிக கவனம் செலுத்தி வருவதால், பல்வேறு துறைகளில், முறை சார்ந்த வேலை வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. கடந்த 2022ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம், பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடக்கி வைத்த ரோஜ்கார் மேளா திட்டம், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதில், முக்கிய நடவடிக்கையாக திகழ்கிறது. இதுவரை தேசிய அளவில், 11 ரோஜ்கார் மேளாக்கள் நடத்தப்பட்டு, 10 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு, பணி நியமன ஆணைகள் வழங்கப் பட்டுள்ளன. இதனால் நாட்டின் வளர்ச்சியில், இளைஞர்களின் பங்களிப்பு அதிகரித்துள்ளது. பிரதமர் திரு. நரேந்திர மோடி இவ்வாண்டு சுதந்திர தின உரையில், இளைஞர்களுக்கு மூன்றரை கோடி வேலை வாய்ப்புகளை புதிதாக உருவாக்குவதற்கான, பிரதமரின் விக்சித் பாரத் வேலை வாய்ப்புத் திட்டத்தை அறிவித்துள்ளார்.....

சேவா சப்தாஹ்- முத்ரா 3 (10)

நாட்டில் தொழில் முனைவுச் சூழலை மேம்படுத்துவதில், மத்திய அரசின் ஸ்டார்ட்-அப் இண்டியா திட்டம், முக்கிய பங்காற்றி வருகிறது. 2016ஆம் ஆண்டு தொடக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ், இதுவரை, அங்கீகரிக்கப்பட்ட 1 லட்சத்து 60 ஆயிரம் ஸ்டார்ட்-அப் நிறுவனங்களுக்கு ஆதரவு அளிக்கப்பட்டு, 17.6 லட்சத்திற்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகள் உருவாக்கப் பட்டுள்ளன. 2015ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கப்பட்ட பிரதமரின் முத்ரா திட்டத்தின் கீழ், லட்சக்கணக்கிலான சிறு தொழில் முனைவோருக்கு, சுலபமான முறையில், வங்கிக் கடன் வழங்கப் படுகிறது. புதுச்சேரியில், லாஸ்பேட்டை பகுதியைச் சேர்ந்த முத்ரா திட்டப் பயனாளி

கவிதா ஹரி, இத்திட்டத்தினால் தமக்கு ஏற்பட்ட பலன்கள் குறித்து கூறுகையில்……

*சேவா சப்தாஹ்- முத்ரா* 4 (6)

முத்ரா திட்டத்தின் கீழ் இதுவரை, 52 கோடிக்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு, மொத்தம் 33 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு வங்கிக் கடன் வழங்கப் பட்டுள்ளது. இதனால், தேசிய அளவில், தொழில் முனைவுப் புரட்சி உருவாகி உள்ளது. இவ்வாறாக நாட்டின் ஸ்டார்ட்-அப் சூழல் வலுவடைந்து வருவதால், இளைஞர்கள், வேலை தேடுவோர் என்னும நிலையில் இருந்து, வேலை வழங்குவோர் என்னும் நிலைக்கு மேம்பட்டு வருகின்றனர்.

-------------------------

*ஜிஎஸ்டி-அன்றாட பொருட்கள் 1 (5)*

நாட்டில் நேற்று முதல் அமலுக்கு வந்துள்ள, அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள், மறைமுக வரிக் கட்டமைப்பை எளிமைப் படுத்துவதில், முக்கிய நடவடிக்கையாக அமைந்துள்ளன. பல்வேறு சரக்குகள், மற்றும் சேவை மீதான வரிக் குறைப்பினால், மக்கள் மீதான வரிச் சுமை கணிசமாக குறைந்துள்ளது. இதுகுறித்து ஒரு செய்தி தொகுப்பு….

*ஜிஎஸ்டி-அன்றாட பொருட்கள்* 2 (14)

(வாய்ஸ்)

புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களின் கீழ், அன்றாட பயன்பாட்டிற்கான பல்வேறு பொருட்கள் மீது வரி குறைக்கப் பட்டுள்ளதால், வீட்டு செலவு கணிசமாக குறைய நேரடி வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. சோப், ஷாம்பு, பற்பசை, ஹேர் ஆயில் போன்ற பொருட்கள் மீது, 18 சதவிகித ஜிஎஸ்டி 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது. உயர் வெப்பநிலையில் கிருமி நீக்கம் செய்யப்பட்ட பால், பனீர், சென்னா, மற்றும், அனைத்து இந்திய ரொட்டி

வகைகள், பூஜ்யம் சதவிகித வரி வகைப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளன. வெண்ணெய், நெய், நூடுல், பாஸ்டா, சாக்லேட், காபி, மற்றும் கார வகை திண்பண்டங்கள் 12 சதவிகித வரி அடுக்கில் இருந்து, 5 சதவிகித அடுக்கிற்கு மாற்றப் பட்டுள்ளன. சமையல் அறைப் பொருட்கள், மிதிவண்டி, தையல் இயந்திரம் போன்ற வீட்டு உபயோக பொருட்கள் மீதான வரியும் 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது. இதனால் இந்திய இல்லங்களின் நிதிச் சுமை குறைந்து, நுகர்வோரின் வாங்கும் சக்தி அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை.

-------------------------

*ஜிப்மர் மகளிர்* (10)

மத்திய அரசின் ஆரோக்கியமான பெண்கள்-வலுவான குடும்பம் இயக்கத்தின் கீழ், புதுச்சேரி ஜிப்மர் சார்பில், விழுப்புரம் மாவட்டம் ஆயந்தூர் கிராமத்தில் இன்று நடைபெற்ற, கிராமப்புற பெண்களுக்கான, விரிவான இலவச மருத்துவ முகாமில், 400க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இம்முகாமில், காசநோய் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கான பரிசோதனை, மற்றும், தாய்-சேய் நல சேவைகளும், ரத்ததான இயக்கம், ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வு, மற்றும், மனநல ஆலோசனைகளும் பெண்களுக்கு வழங்கப்பட்டன. பிரதமரின் ஜன் ஆரோக்யா உள்ளிட்ட திட்டங்களின் கீழ், பயனாளிகளை பதிவு செய்து, பதிவு அட்டைகளும் வழங்கப்பட்டன.

-------------------------

*இருதய தினம்* (7)

உலக இருதய தினத்தை முன்னிட்டு, புதுச்சேரியில் இன்று நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியில், 200க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் மற்றும், மருத்துவ மாணவர்கள் கலந்து கொண்டனர். முதுநிலை காவல் துறை கண்காணிப்பாளர் திரு. கலைவாணன், பேரணியை கொடியசைத்து தொடக்கி வைத்தார். திடீரென ஒருவருக்கு மாரடைப்பு ஏற்பட்டால்,

உடனடியாக செய்ய வேண்டிய முதலுதவி குறித்து, விழிப்புணர்வு நாடகமும், பேரணியில் இடம்பெற்றது.

-------------------------

<u>*புதுச்சேரி பல்கலைக்கழகம்* (7)</u>

பாரத சாரண-சாரணியர் இயக்கத்தின் மிக உயர்ந்த விருதான ராஷ்ட்ரபதி ஸ்கவுட் விருது பெற்றுள்ள, புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் இறுதியாண்டு எம்.பி.ஏ. மாணவர் கவுதம்-மிற்கு, பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பிரகாஷ் பாபு பாராட்டு தெரிவித்துள்ளார். ஒழுக்கம், தலைமைத் திறன், மற்றும், சமூகப் பணியில் சிறந்து விளங்கும் சாரணர்களுக்கான இந்த விருது, நாட்டை கட்டி எழுப்பும் பணிகளில் இளைஞர்களை ஊக்குவிக்க, மிகவும் உதவிகரமாக இருக்கும் என்று அவர் கூறினார்.

-------------------------

<u>*வானிலை* (13)</u>

இன்று, மேற்குவங்கம், மற்றும், வடக்கு ஒடிசாவை ஒட்டிய வடமேற்கு வங்கக் கடலில் நிலவும் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, அடுத்த 24 மணி நேரத்திற்கு பின்னர், வலுக் குறையும் என எதிர்பார்க்கப் படுகிறது. மத்திய கிழக்கு மற்றும் அதை ஒட்டிய வடக்கு வங்கக் கடல் பகுதிகளில், வரும் 25ஆம் தேதி வாக்கில், காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகக் கூடும் என்றும், இது காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, வரும் 27ஆம் தேதி வாக்கில், தெற்கு ஒடிசா, மற்றும் வடக்கு ஆந்திர கடற்கரையை கடக்கக் கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், வரும் 29ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக விழுப்புரம் உள்ளிட்ட இடங்களில், தலா 5 செ.மீ மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரியில், 2 செ.மீ மழை பெய்துள்ளது.

-------------------------

*பில்டத்தான்* (13)

முன்னேறிய இந்தியா, சுயசார்பு இந்தியா, உள்ளூர் பொருட்களுக்கு உரத்த குரல் போன்ற திட்டங்களின் உணர்வுகளுக்கு ஏற்ப, நாட்டின் பிரச்சனைகளுக்கு தீர்வுகாணும் வகையிலான புதுமைப் படைப்புகளை உருவாக்குவதில், இளைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கத்திலான விக்சித் பாரத் பில்டத்தான் போட்டிகளுக்கு, பெயர் பதிவு செய்து கொள்ளும் நடைமுறைகளை, மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான், புதுடெல்லியில் இன்று தொடக்கி வைத்தார். மத்திய கல்வி அமைச்சகத்தின் பள்ளிக் கல்வித் துறை, மற்றும், நிதி ஆயோக் அமைப்பின் அடல் புதுமையாக்க இயக்கம் சார்பில், அடுத்த மாதம் 13ஆம் தேதி நடைபெற உள்ள இப்போட்டிக்கு, இன்று முதல், அடுத்த மாதம் 6ஆம் தேதி வரை, மாணவர்கள் பெயர் பதிவு செய்து கொள்ளலாம் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. நாடெங்கிலும் இருந்து சுமார் 6 லட்சம் பள்ளிகளைச் சேர்ந்த, 12 கோடி மாணவர்கள் இப்போட்டியில் பங்கேற்பார்கள் என்றும், எதிர்பார்க்கப் படுகிறது.

------------------------